RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்-47 | 18 பிப்ரவரி செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## நாடு கடத்தப்பட்ட இந்தியர்களை அழைத்துவர பிரதமர் முயற்சிக்காதது ஏன்? செல்வப்பெருந்தகை

சென்னை, பிப்.18

நாடு கடத்தப்பட்ட இந்தியர்கள் அநாகரிகமான முறையில் அழைத்து வரப்பட்டதை தடுக்கத் தவறிய பிரதமர் நரேந்திர மோடியை வன்மையாக கண்டிக்கிறேன். அமெரிக்க நாட்டு சட்டப்படி இப்படித் தான் நடந்து கொள்வார்கள் என்றால், நாடு கடத்தப்பட்ட இந்தியர்களின் வருகையை முன்கூட்டியே அறிந்து வைத்திருக்கிற இந்திய பிரதமர், விமானத்தை அனுப்பி அவர்களை அழைத்து வர ஏன் முயற்சி செய்யவில்லை ? என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "பாஜக ஆட்சியில் இந்தியாவுக்கு தலைகுனிவு ஏற்படுகிற வகையில் அமெரிக்காவிலிருந்து இரண்டாவது கட்டமாக நாடு கடத்தப்பட்ட இந்தியர்களுக்கு மீண்டும் கை, கால்களில் விலங்கு பூட்டி 109 பேர் ராணுவ விமானத்தில் அழைத்து வரப்பட்ட கொடுமை நிகழ்ந்துள்ளது. ஏற்கெனவே, கடந்த வாரம் 104 இந்தியர்கள் இந்த கொடுமையை அனுபவித்தனர். மீண்டும் சுமார் 40 மணிநேர பயணத்தின் போது கால்களில் விலங்கு பூட்டப்பட்டு, கைதிகளை போல மோசமாக நாடு கடத்தப்பட்டதாக தாயகம் திரும்பிய இந்தியர்கள் தங்களது வேதனையை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றுவதற்கு புதிதாக பொறுப்பேற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப் கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறார். சமீபத்தில் அவரை பிரதமர் மோடி சந்தித்த



போது இதுகுறித்து பேசியிருக்க வேண்டும். அமெரிக்க நாட்டு சட்டப்படி இப்படித் தான் நடந்து கொள்வார்கள் என்றால், நாடு கடத்தப்பட்ட இந்தியர்களின் வருகையை முன்கூட்டியே அறிந்து வைத்திருக்கிற இந்திய பிரதமர், விமானத்தை அனுப்பி அவர்களை அழைத்து வர ஏன் முயற்சி செய்யவில்லை ?

அமெரிக்காவால் இத்தகைய அவமானத்தையும், இழிவையும் இந்தியர்கள் அனுபவிக்கிற சூழலில் டொனால்ட் ட்ரம்பை நரேந்திர மோடி கட்டித் தழுவி மகிழ்ச்சி காண்பதில் என்ன பெருமை இருக்கிறது ? நாடு கடத்தப்பட்ட இந்தியர்கள் அநாகரிகமான முறையில் அழைத்து வரப்பட்டதை தடுக்கத் தவறிய பிரதமர் நரேந்திர மோடியை வன்மையாக கண்டிக்கிறேன். மேலும், பல இந்தியர்கள் அமெரிக்காவில் இருந்து வெளியேற்றப்படுவார்கள் என்ற செய்தி அனைவரையும் மன வேதனையில் ஆழ்த்தி வருகிறது. இத்தகைய அவலநிலைக்கு நரேந்திர மோடி என்ன தீர்வு காணப் போகிறார் என்பதை நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

பிரதமர் நரேந்திர மோடி ஆட்சியில் ஜனநாயகத்தின் நான்காவது தூணான பத்திரிகை சுதந்திரம் தொடர்ந்து நசுக்கப்பட்டு வருகிறது. பத்திரிகையாளர்கள் பலர் ஆண்டுக்கணக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். பத்திரிகைகள் சுதந்திரமாக செய்திகள் வெளியிட முடியவில்லை என்பதற்கு விகடன் இணைய தளம் முடக்கப்பட்டது சான்றாகும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

இணையதள முடக்கத்துக்கு கண்டனம்: அதேபோல் விகடன் குழும இணையதள முடக்கம் அப்பட்டமான பாசிச நடவடிக்கை என்றும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர், "சில தினங்களுக்கு முன்பு அமெரிக்க சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது அதை குறிப்பிட்டு, பிரதமர் மோடி மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சந்திப்பை விகடன் தனது இணைய இதழின் முகப்பு அட்டையில் கார்ட்டூன் படமாக வெளியிட்டது. அதை சகித்துக் கொள்ள முடியாத ஒன்றிய பாஜக அரசு, பாரம்பரியமிக்க விகடன் குழுமத்திலிருந்து வெளிவருகிற இணையதளத்தை முடக்கியது அப்பட்டமான பாசிச நடவடிக்கையாகும். இதை வன்மையாக கண்டிப்பதோடு, விகடன் இணையதள முடக்கத்தை உடனடியாக ஒன்றிய பாஜக அரசு திரும்ப பெற வேண்டும்." எனக் குறிப்பிட்டுள்ளார்.


டெல்லி ரயில் நிலையத்தின் அனைத்து நடைமேடைகளிலும் கட்டுக்கடங்காத கூட்டம் அலைமோதிக் கொண்டிருக்கும் போது நடைமேடைக்கான மாற்று அறிவிப்பு வெளியிடப்பட்டதனால் மூலம் இத்தகைய கோர சம்பவம் நிகழ்ந்துள்ளது. அதுமட்டுமல்லாமல், ஒரு மணி நேரத்திற்கு 1500 பொது டிக்கெட்டுகள் தொடர்ந்து விற்பனை செய்யப்பட்டதே கூட்ட நெரிசலுக்கு காரணமாக அமைந்து விட்டது. இது ரயில்வே துறையின் படுதோல்வியை காட்டுகிறது." என்று செல்வப்பெருந்தகை குறிப்பிட்டுள்ளார்.

## மயிலாடுதுறையில் 2 இளைஞர்கள் கொல்லப்பட்ட வழக்கில் 3 தனிப்படைகள் அமைப்பு!

மயிலாடுதுறை, பிப்.18

மயிலாடுதுறையில் 2 இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன என எஸ்.பி. தெரிவித்துள்ளார். மயிலாடுதுறை மாவட்டம் பெரம்பூரை அடுத்த முட்டம் கிராமத்தைச் சேர்ந்த தங்கதுரை(28), ராஜ்குமார்(34) ஆகியோர் புதுச்சேரி சாராயம், மதுபாட்டில்களை காரைக்காலில் இருந்து சட்ட விரோதமாக கடத்தி வந்து, அப்பகுதியில் விற்பனை செய்துள்ளனர். மது விற்பனையில் ஈடுபட்டதாக போலீஸாரால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட ராஜ்குமார் பிப்.14ம் தேதி ஜாமீனில் வெளியே வந்தார்.

இதனிடையே அதே பகுதியைச் சேர்ந்த தினேஷ் என்பவருக்கும் தங்கதுரையின் சகோதரர் மூவேந்தனுக்குமிடையே கடந்த 13ம் தேதி தகராறு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், தினேஷ் மற்றும் அவரது நண்பர்களான முட்டம் பகுதியைச் சேர்ந்த ஹரிஷ், அவரது சகோதரர் அஜய்(19), மயிலாடுதுறை சீனிவாசபுரத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர் ஹரிசக்தி(20) ஆகிய 4 பேரும் பிப்.14ம் தேதி இரவு முட்டம் வடக்கு வீதியில் நின்று பேசிக்கொண்டிருந்த போது அங்கு வந்த தங்கதுரை,





ராஜ்குமார், மூவேந்தன் ஆகிய 3 பேரும் தினேஷிடம் தகராறு செய்து, கத்தியால் குத்தியுள்ளனர்.

அப்போது தடுக்க முயன்ற ஹரிஷ், ஹரி சக்தி, அஜய் ஆகியோருக்கும் கத்திக்குத்து விழுந்தது. இதில், ஹரிஷ், ஹரிசக்தி ஆகியோர் உயிரிழந்தனர். இதையடுத்து, சாராய வியாபாரத்தை தட்டிக் கேட்டதால்தான் இந்த கொலை சம்பவம் நடந்ததாக குற்றம்சாட்டி, உயிரிழந்தோரின் குடும்பத்தார், உறவினர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். ராஜ்குமார், மூவேந்தன் வீடுகள் சூறையாடப்பட்டன.

கொலை சம்பவம் குறித்து பெரம்பூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து சாராய வியாபாரிகள் மூவேந்தன், தங்கதுரை, ராஜ்குமார் ஆகிய 3 பேரை நேற்று முன்தினம் கைது செய்தனர். தொடர்ந்து, உயிரிழந்தோரின் உடல்கள் அவர்களின் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டு, போலீஸார் பாதுகாப்புடன் உடனடியாக அடக்கம் செய்யப்பட்டன. இதனிடையே தினேஷ் மற்றும் மூவேந்தன் தரப்பினரிடையே இருந்த முன்விரோதமே இந்த சம்பவத்துக்கு காரணம். மது விற்பனை குறித்து தட்டிக்கேட்டதால் சம்பவம் நிகழ்ந்ததாக கூறப்படுவது உண்மைக்கு புறம்பானது என காவல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், மயிலாடுதுறை எஸ்.பி. கோ.ஸ்டாலின் நேற்று முன்தினம் இரவு செய்தியாளர்களிடம் கூறும்போது, ''கொலை சம்பவத்தில் ஈடுபட்ட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. சாராய விற்பனை செய்ததை தடுத்ததால்தான் கொலை சம்பவம் நடைபெற்றதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்சம்பவத்தில் மேலும் யாருக்காவது தொடர்பு இருந்தால் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

காவல் துறை அதிகாரிகள் மெத்தனப்போக்கில் நடந்து கொண்டார்கள் என்று தெரிய வந்தால், அவர்கள் மீதும் கட்டாயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், தேவையற்ற வதந்திகளை யாரும் பரப்ப வேண்டாம்'' என்றார்.

இந்த சம்பவம் தொடர்பாக நேற்று மூவேந்தன், தங்கதுரை ஆகியோரின் தந்தை முனுசாமி உள்ளிட்ட சிலரிடம் போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதனிடையே நேற்று முன்தினம் நள்ளிரவு முட்டம் பகுதியில் இருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ள செல்வம் என்பவரின் தர்பூசணி கடையின் கீற்றுக் கொட்டகைக்கு தீ வைக்கப்பட்டது குறித்தும் விசாரணை நடைபெற்று வருகிறது. மேலும், அசம்பாவிதங்கள் நடைபெறாமல் தடுக்க முட்டம் பகுதியில் போலீஸார் தொடர்ந்து பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## திவ்யா சத்யராஜுக்கு திமுகவில் முக்கிய பொறுப்பு

சென்னை, பிப்.18

திமுகவில் இணைந்த திவ்யா சத்யராஜுக்கு தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் பொறுப்பு தரப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன் வெளியிட்ட அறிவிப்பு: திமுக சிறுபான்மை நல உரிமைப் பிரிவு தலைவராக டி.பி.எம்.மைதீன்கான், சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் வி.ஜோசப்ராஜ் சிறுபான்மை நல உரிமைப் பிரிவு துணைத் தலைவராகவும், சிறுபான்மை நல உரிமை பிரிவு துணைச் செயலாளராக கே.அன்வர் அலி ஆகியோர் நியமிக்கப் படுகின்றனர். கோவை செல்



வராஜ் மறைந்ததால், திமுக செய்தித் தொடர்பு துணைச் செயலாளராக சூர்யா கிருஷ்ணமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். திமுக தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளராக நியமிக்கப்பட்ட தமிழ் பொன்னிக்கு பதிலாக திவ்யா சத்யராஜ் நியமிக்கப்படுகிறார் என தெரிவித்துள்ளார். திவ்யா சத்யராஜ் கடந்த மாதம் திமுகவில் இணைந்தது குறிப்பிடத்தக்கது.

## கூட்ட நெரிசலில் சிக்கி 18 பேர் உயிரிழந்ததன் எதிரொலி டெல்லி ரயில் நிலையத்தில் பலத்த பாதுகாப்பு

புதுடெல்லி , பிப்.18

பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவில் பங்கேற்க புதுடெல்லி ரயில் நிலையத்தில் சனிக்கிழமை இரவு ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான பயணிகள் திரண்டதால் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 18 பேர் உயிரிழந்த நிலையில், தற்போது ரயில் நிலையத்தில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளா நிகழ்ச்சியில் தினம்தோறும் லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர். இதுவரை 50 கோடிக்கும் அதிகமானோர் புனித நீராடியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த ஜனவரி 13ம் தேதி தொடங்கிய மகா கும்பமேளா, வரும் 26ம் தேதி நிறைவடைகிறது.

கும்பமேளா நிறைவடையும் நாட்கள் நெருங்குவதால் பிரயாக்ராஜ் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தலைநகர் டெல்லியில் இருந்து பிரயாக்ராஜ் செல்வதற்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. நேற்று முன்தினம் (சனிக்கிழமை) இரவு டெல்லி ரயில் நிலையத்தில் பிரயாக்ராஜ் செல்வதற்காக 13 மற்றும் 14வது நடைமேடையில் ஆயிரக்கணக்கானோர் ரயிலுக்காக காத்திருந்தனர். அப்போது, ஏற்பட்ட நெரிசலில் சிக்கி பலர் மூச்சுத் திணறி உயிரிழந்தனர். ஏராளமானோர்




காயமடைந்தனர்.

இந்த சம்பவம் குறித்து விளக்கமளித்த டெல்லி போலீஸார், "மகா கும்பமேளாவுக்கு செல்ல அதிக அளவில் பயணிகள் டெல்லி ரயில் நிலையத்தில் திரண்டனர். இதற்கேற்ப, கூடுதல் ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. பிரயாக்ராஜ் செல்லும் 4 ரயில்களில் 3 ரயில்கள் தாமதம் ஆனதால், கூட்டம் அதிகரித்தது. தவிர, 14வது நடைமேடையில் பிரயாக்ராஜ் விரைவு ரயில் நின்றிருந்தது. அப்போது, 16வது நடை மேடைக்கு பிரயாக்ராஜ் சிறப்பு ரயில் வந்தடைந்தது. இதுகுறித்த அறிவிப்பால் பயணிகள் குழப்பம் அடைந்து, ஒரே இடத்தில் குவிந்தனர். இதனால் நெரிசல் ஏற்பட்டது" என தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தை அடுத்து, டெல்லி ரயில் நிலையத் தில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது. இது குறித்து தெரிவித்த காவல்துறை அதிகாரி ஒருவர், ரயில் நிலையத்தில் நெரிசலை நிர்வகிக்க டெல்லி காவல்துறை, ரயில்வே பாதுகாப்புப் படை மற்றும் அரசு ரயில்வே காவல்துறை ஆகியவற்றுடன் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நாங்கள் தடுப்புகளை அமைத்துள்ளோம். ரோந்துப் பணியை தீவிரப்படுத்தியுள்ளோம். அசம்பாவித சம்பவங்களைத் தடுக்க விரைவான எதிர்வினை குழுக்களை நியமித்துள்ளோம். சிசிடிவி கண்காணிப்பும் மேம்படுத்தப்பட்டுள்ளது. கூட்டத்தைக் கட்டுப்படுத்த கட்டுப்பாட்டு அறைகளில் இருந்து நிகழ்நேர காட்சிகள் கண்காணிக்கப்படுகின்றன. பயணிகளுக்கு வழிகாட்டவும், பீதி அடையும் சூழ்நிலைகளைத் தவிர்க்கவும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன" என்று தெரிவித்தார்.

டெல்லி ரயில் நிலையத்தில் சனிக்கிழமை இரவு 10 மணியளவில் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. அப்போது ரயில் அறிவிப்புகளில் ஏற்பட்ட குழப்பத்தால், பயணிகள் கூட்டம், ஒரு குறுகிய படிக்கட்டு வழியாக 16வது நடைமேடையை நோக்கி விரைந்தனர். மேலே செல்ல முயன்வர்களுக்கும் கீழே இறங்க முயன்றவர்களுக்கும் இடையே ஏற்பட்ட தள்ளுமுள்ளு காரணமாக உயிரிழப்புகள் ஏற்பட்டன. இதையடுத்து, டெல்லி ரயில் நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டதை அடுத்து தற்போது கூட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## டெல்லி நில அதிர்வு: 4.0 ரிக்டருக்கே கட்டிடங்கள் பயங்கரமாகக் குலுங்கியது ஏன்?

புதுடெல்லி, பிப்.18

தலைநகர் டெல்லி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் நேற்று அதிகாலை 5.36 மணி அளவில் நில அதிர்வு ஏற்பட்டது. டெல்லியை மையமாகக் கொண்டு வட இந்தியா முழுவதும் இந்த நில அதிர்வு உணரப்பட்டதாக தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. பூமிக்கு அடியில் 5 கி.மீ. ஆழத்தில் இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதும் உறுதியாகி உள்ளது.




நில அதிர்வின் தாக்கம் 4.0 ரிக்டர் என்றாலும் கூட கட்டிடங்கள் மிகப்பெரிய அளவில் குலுங்கியதால் டெல்லிவாசிகள் கடும் அச்சத்தில் உள்ளனர். 'இது போல இதற்கு முன்பு உணர்ந்தது இல்லை. கட்டிடங்கள் பயங்கரமாகக் குலுங்கின' என்று காசியாபாத் வாசி ஒருவர் ஊடகப் பேட்டியில் கூறியுள்ளார். இதுபோன்ற பாதிப்பினை ஏற்படுத்தும் நில அதிர்வுக்கு புவியியல் நிபுணர்கள் 'ஆழமற்ற நிலநடுக்கம்' ( shallow earthquake ) எனக் குறிப்பிடுகின்றனர். இதனைப்பற்றி சற்றே விரிவாகப் பார்ப்போம்.

ஆழமற்ற நிலநடுக்கம் என்றால் என்ன? ஆழமற்ற நிலநடுக்கமானது (shallowearthquake ) பூமியின் மேற்பரப்பை ஒட்டிய பகுதியில் மையம் கொண்டிருக்கும். அதாவது பூமிக்கு கீழ் 5 முதல் 10 கிலோ மீட்டர் ஆழத்திலேயே மையம் கொண்டிருக்கும். இதனாலேயே இவை வழக்கமாக அதிக ஆழத்தில் மையம் கொண்டிருக்கும் நிலநடுக்கத்தைவிட அதிக பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

நிலநடுக்கத்தின் ஆழத்தைப் பொறுத்து புவியியல் நிபுணர்கள் அதனை வகைப்படுத்துகின்றனர். அதன்படி பூமிக்கு அடியில் 0 முதல் 70 கி.மீ ஆழம் வரை மையம் கொண்ட நிலநடுக்கங்களை ஆழமற்றவை அல்லது நடுத்தரமான நிலநடுக்கம் என்றும், 70 முதல் 300 கிமீ அழம் வரையில் மையம் கொள்ளும் நிலநடுக்கங்களை ஆழமானவை என்றும், 300 கிலோமீட்டரையும் கடந்த ஆழத்தில் மையம் கொள்பவற்றை மிக ஆழமான நிலநடுக்கம் என்றும் வரையறுத்து வைத்துள்ளனர். இதன்மூலம் டெல்லியில் ஏற்பட்ட நில அதிர்வு பூமிக்கு அடியில் 5.5 கி.மீ ஆழத்தில் மையம் கொண்டதால், இதனை ஆழமற்றது, அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது என்று நாம் வகைப்படுத்தலாம்.

இந்தோனேசியா உதாரணம்: இத்தகைய, அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஆழமற்ற நிலநடுக்கத்துக்கு கடந்த 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தோனேசியாவில் ஏற்பட்ட 5.6 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தை உதாரணமாகக் கூறலாம். இந்த நிலநடுக்கத்தில் 160 பேர் உயிரிழந்தனர். பல கட்டிடங்கள் தரைமட்டமாகின.

அமெரிக்க புவியியல் ஆய்வு மையமானது, "இத்தனை ரிக்டருக்கு மேல் பதிவாகும் நிலநடுக்கம்தான் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்றெல்லாம் உறுதியாகக் கூறவிட முடியாது. நிலநடுத்தின் பாதிப்பு என்பது அது பூமியில் எத்தனை ஆழத்தில் மையம் கொள்கிறது, எந்த மாதிரியான மண் தன்மை கொண்ட நிலத்தில் அது ஏற்படுகிறது, அந்தப் பரப்பில் கட்டிடத்தின் உறுதித் தன்மை என்ன போன்ற பல காரணிகளையும் பொறுத்ததே அமைகிறது." என்று தெரிவித்துள்ளது.


குண்டு வெடிப்பு போன்ற பாதிப்பு.. நிலநடுக்க பாதிப்பின் வீரியம் அதன் சக்தியைத் தாண்டி, அதன் மையப் புள்ளி, அதன் ஆழம் ஆகியனவற்றைப் பொறுத்தே அமைகின்றன. நிலநடுக்கம் பூமியின் ஆழத்திலும் மையம் கொள்ளலாம், நிலப்பரப்பின் அருகேயும் மையம் கொள்ளலாம். அந்த வகையில் ஆழமற்ற நிலநடுக்கங்கள் / நில அதிர்வுகள் ரிக்டரில் குறைந்த அளவில் இருந்தாலும் கூட அதன் பாதிப்பு அதிகமாக அமைந்து விடுகிறது.

ஆழமான நிலநடுக்கங்களில் இருந்து வரும் நில அதிர்வு அலைகள் மேற்பரப்பில் அதிக தூரம் பயணிக்க வேண்டும், வழியில் ஆற்றலை இழக்கின்றன. இதனாலேயே இத்தகைய நில அதிர்வுகளால் கட்டிடங்கள் குலுங்குவது அதிகமாக இருக்கிறது. இதனை ஒரு பெரிய நகரத்தின் கீழே குண்டு வைத்தால் எப்படி அதிர்வு இருக்குமோ அப்படிக் குலுங்கும் என்று புரிந்து கொள்ளலாம்.

பிரதமர் மோடி அறிவுறுத்தல்: இதற்கிடையில் பிரதமர் மோடி தனது எக்ஸ் தள பதிவில் "டெல்லி மற்றும் அதன் அருகிலுள்ள பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டது. அனைவரும் அமைதியாக இருக்கவும், பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு அதிகாரிகள் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர்"

# நீலகிரி மாவட்டத்தில் கேரட்டில் கலப்படம்! கண்காணிக்க தனிக்குழு கலெக்டர் உத்தரவு







குன்னூர், பிப்.18

நீலகிரி மாவட்டத்தில் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் நீலகிரி மாவட்டம் முழுவதும் ஆங்கிலேயர்களின் பயிரான கேரட், பீட்ரூட் , முட்டைகோஸ் ,வெள்ளைப் பூண்டு போன்ற காய்கறிகள் அறிமுகம் செய்யப்பட்டு காலம் காலமாக நீலகிரியில் ஆங்கில காய்கறிகள் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில் அண்மைக்காலமாக கர்நாடக மாநிலத்தில் உற்பத்தி செய்யக்கூடிய கேரட்டை நீலகிரிக்கு கொண்டு வந்து,அதனை ஊட்டி கேரட் என கூறி ஒரு சில வியாபாரிகள் போலியாக விற்பனை செய்து வருவதால் ஊட்டி கேரட் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் குன்னூர் அருகே உள்ள கொல்லிமலை பகுதியில் இயங்கி வரும் தனியார் கேரட் சுத்திகரிக்கும் மையத்திற்கு மாலூர் பகுதியிலிருந்து தரம் குறைவான கேரட்டுகள் கொண்டுவரப்பட்டு ரசாயன கலவை மூலம் சுத்திகரித்து ஊட்டி கேரட்டுகளுடன் கலப்படம் செய்து லாரியில் ஏற்றப்பட்டு விற்பனைக்கு கொண்டு செல்ல இருப்பதை அறிந்த நீலகிரி மாவட்ட உருளைக்கிழங்கு மற்றும் மலை காய்கறி விவசாய சங்கத்தினர் கேரட் ஏற்றிக் கொண்டிருந்த லாரியை சிறை பிடித்தும், சுத்திகரிப்பு நிலையத்தை முற்றுகையிட்டும் போராட்டம் நடத்தினர்.

மேலும் சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறையினர் விவசாயிகளிடம் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து இந்த விவகாரம் குறித்து மாவட்ட ஆட்சியரிடம் புகார் தெரிவிக்கப்பட்டது.. இதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் கலப்பட கேரக்டர்களை கண்காணிக்கவும் , தடுக்கவும் 7 பேர் கொண்ட குழு அமைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் தோட்டக்கலை இணை இயக்குனர், உதகை துணை காவல் கண்காணிப்பாளர், சிறப்பு வட்டாட்சியர், தோட்டக்கலை துணை மற்றும் இணை இயக்குனர் உள்ளிட்ட 7 பேர் கொண்ட குழு அமைக்கப் பட்டுள்ளதாகவும் இக்குழு ஏழு நாட்களுக்குள் கலப்பட கேரட் குறித்து விசாரணை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெரியகுளத்தில் புதிய 5K கார் கேர் திறப்பு விழா



பெரியகுளம் பிப்18

தேனி மாவட்டம் பெரியகுளம் மதுரை ரோட்டில் 221 வது கிளையான புதிய 5ரி கார் கேர் ( மகிழுந்து பராமரிப்பு) திறப்பு விழா நடைபெற்றது. இந்த புதிய நிறுவனத்தை தேனி நாடாளுமன்ற உறுப்பினரும், தேனி (வ) மாவட்ட செயலாளருமான தங்க தமிழ்ச்செல்வன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணக்குமார், பெரியகுளம் (வ) ஒன்றிய செயலாளர் எல்.எம் பாண்டியன், 5 கே கார் கேர் நிறுவனர் கார்த்திக்குமார், நீதிபதி தர்மபிரபு, மேன் கார் நிறுவனரும், 5 கே கார் கேர் பெரியகுளம் கிளை உரிமையாளருமான முகமது சர்புதீன், பெரியகுளம் நகராட்சி தலைவர் சுமிதா சிவக்குமார், பெரியகுளம் நகர் கழக செயலாளர் முகமது இலியாஸ்,விசிக தேனி (கி) மாவட்ட செயலாளர் ரபீக், தாமரைக்குளம் பேருராட்சி தலைவர் பால்பாண்டி, பெரியகுளம் நகர் வளர்ச்சி நிர்வாகிகள் மணிகார்த்திக், அன்புக்கரசன், திமுக மாவட்ட பிரதிநிதி செந்தில்குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு துறை துணை அமைப்பாளர் கார்த்திக், நகர் கழக துணைச்செயலாளர் சேதுராமன், 12 வது வார்டு செயலாளர் முகமது அலி, பரக்கத்துல்லாஹ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி அருகே கணவனை கழுத்தை நெரித்துகொலை செய்து விட்டு நாடகம் ஆடிய மனைவி-12 வயது மகன் கைது





தென்காசி பிப் 18.

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் தாலுகா அடுத்து சேந்தமரம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட நொச்சிகுளம் கிராமத்தைச் சேர்ந்த மரியா ஆரோக்கிய செல்வி வயது (30 )கடந்த 5 தேதி தன்னுடைய கணவர் முத்துக்குமார் மஞ்சகாமாலை நோயால் மயக்க அடைந்து விட்டார்

எனக் கூறி 108 ஆம்புலன்ஸ் வரவழைத்துள்ளார் அங்கு வந்த 108 ஆம்புலன்ஸ் செவிலியர்கள் மயங்கிய நிலையில் இருந்த முத்துக்குமாரை பரிசோதனை செய்து பார்த்த பொழுது அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் என தகவலை தெரிவித்தனர்

இருப்பினும் இவரின் இறப்பு சந்தேகம் என 108 ஆம்புலன்ஸ் இருந்த ஊழியர்கள் சேந்தமரம் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர்

சந்தேகத்தின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற சேந்தமரம் போலீசார் முத்துக்குமாரின் உடலை கைப்பற்றி சந்தேக மரணம் என வழக்கு பதிவு செய்து பிரேத பரிசோதனைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இறப்புக்கான காரணம் என்ன என்பதை தெரிந்து கொள்ள மருத்துவர்கள் பிரேத பரிசோதனை செய்தனர்

அதன் பின்னர் பிரேத பரிசோதனையில் முத்துக்குமார் கழுத்து எலும்பு நெரிக்கப்பட்டு இருப்பது தெரியவந்தது

இருப்பினும் பிரேத பரிசோதனை அறிக்கை வந்த பிறகு மரியா ஆரோக்கிய செல்வியை விசாரிக்க காவல்துறை முடிவு செய்த நிலையில் பிரேத பரிசோதனை அறிக்கை வருவதற்கு முன்பு

மரியா ஆரோக்கிய செல்வி மருத்துவ பரிசோதனை அறிக்கையில் நிச்சயமாக கொலை என தெரிய வந்துவிடும் என பயந்து அதற்கு முன்பாக கிராம நிர்வாக அலுவலர் இடத்தில் சரண் அடைந்து நாங்கள் இருவரும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் காதலித்து திருமணம் செய்து கொண்டோம் ஆனால் எனது கணவர் வேலைக்குச் செல்லாமல் தினசரி குடித்துவிட்டு வந்து எனக்கும் எனது பிள்ளைகளுக்கும் தொந்தரவும் தொல்லையும் கொடுத்துக் கொண்டிருந்தார் மேலும் பிள்ளைகளை அடிப்பது என்னை அடிப்பது என தொடர்ந்து தொந்தரவு செய்ததால் கடந்த 5ம் தேதி எனது கணவர் முழுமையாக மது அறிந்து போதையில் படுத்து கிடந்த பொழுது நானும் எனது 12 மகனும் அப்பாவை தீர்த்துக்கட்ட திட்டமிட்டு போதையில் தூங்கிக் கொண்டிருந்தபோது கழுத்தை நெரித்தேன் எனது மகன் தலகாணியை வைத்து மூஞ்சில் அமுக்கினான் அதில் அவர் மயங்கிவிட்டார் அதன் பின்னர் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் மஞ்சள் காமாலையில் எனது கணவர் மயங்கிவிட்டார் எனக் கூறி நம்ப வைத்து 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து வர செய்தேன் ஆம்புலன்ஸ் வந்தவர்கள் எனது கணவர் முத்துக்குமார் இறந்து இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது என கூறிவிட்டு முத்துக்குமாரை வீட்டிலே போட்டுவிட்டு சென்று விட்டனர் அதன் பின்னர் சிறிது நேரத்தில் காவல் துறை எனது வீட்டுக்கு வந்து எனது கணவரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர் பிரேத பரிசோதனை அறிக்கையில் கொலை என தெரிய வந்துவிடும் என்பதை தெரிந்து கொண்ட நான் தங்கள் முன்பு ஆஜராகி விடுகிறேன் என கிராம நிர்வாக அலுவலரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

அதன் பின்னர் கிராம நிர்வாக அலுவலரின் புகாரின் அடிப்படையில் கடையநல்லூர் சர்க்கிள் சேந்தமரம் இன்ஸ்பெக்டர் ஆடிவேல் மரிய ஆரோக்கிய செல்வியை கைது செய்து விசாரணை செய்ததில் நானும் 12 வயது உடைய எனது மூத்த மகனும் கணவர் முத்துக்குமாரை கழுத்தை நிறுத்தி கொலை செய்தோம் என போலீசாரிடமும் வாக்குமூலம் கொடுத்ததின் அடிப்படையில் தாய் மகன் இருவரையும் கடையநல்லூர் சரக சேந்தமரம் இன்ஸ்பெக்டர் ஆடிவேல் சப் இன்ஸ்பெக்டர் தீபன் குமார் ஆகியோர் கைது செய்து சிறையில் அடைத்தனர் மரியா ஆரோக்கிய செல்விக்கு ஒரு பெண் ஒரு ஆண் குழந்தை உள்ளது. மனைவியே கணவனை கழுத்தை நெரித்து கொலை செய்துவிட்டு மஞ்சள் காமாலையால் இறந்து விட்டார் என நாடகமாடியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# இந்திய தேசிய ரியல் எஸ்டேட் பில்டர்ஸ் லேண்ட் டெவலப்பர் நலசங்கத்தின் 11மாநில மாநாடு குறித்த ஆலோசனை கூட்டம்



மறைமலை நகர் பிப் 18

இந்தியதேசிய ரியல் எஸ்டேட் பில்டர்ஸ் லேண்ட் டெவலப்பர் நலசங்கத்தின் 11மாநில மாநாடு குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது

செங்கல்பட்டு மாவட்டம் மறைமலை நகரில் இந்திய தேசிய ரியல் எஸ்டேட் பில்டர்ஸ் லேண்ட் டெவலப்பர் நலசங்கத்தின் 11மாநில மாநாடு குறித்து ஆலோசனை கூட்டம் மாவட்ட தலைவர் லயன் ப.கார்த்திக் தலைமையில் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. அனைவரையும் செங்கல்பட்டு தொகுதி தலைவர் சக்திவேல் வரவேற்று பேசினார் இதில் சிறப்பு அழைப்பாளராக அதன் அகில இந்திய தலைவர் வி.என்.கண்ண்ன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பின்னர் மாநாடு அழைப்பிதழை சங்க நிர்வாகிகளுக்கு வழங்கினார் இதில் மாநில செயலாளர்கள் சைதை தனசேகரன், எஸ்.கே. ராஜா மாவட்ட செயலாளர் ராஜசேகரன், மாவட்ட பொருளாளர் சீனிவாசன், மாவட்ட இனைய செயலாளர்கள் அருன், வெங்கடேசன், ரவிசெங்கல்பட்டு தொகுதி செயலாளர் மதன், பொருளாளர் முருகேசன், மதுராந்தகம் தொகுதி தலைவர் சுப்பிரமணி, செயலாளர் குணா, பொருளாளர் பழனி மற்றும் வெங்கடேசன், பாலகுமார், ரங்கன், நடராஜ், கோதண்டம், கணேசன், கவிகார்த்திகேயன், சுரேஷ், ராமநாதன், வேலு மற்றும் மாநில மாவட்ட தொகுதி நகர் நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# குரோம்பேட்டையில் நடைபெற்ற மாரத்தான் போட்டியை கொடியாசைத்து துவக்கி வைத்த அமைச்சர் தா.மோ.அன்பரசன்






குரோம்பேட்டை பிப் 18

சென்னை அடுத்த குரோம்பேட்டை பகுதியில் நண்பர்கள் அறப்பணி இயக்கம் தலைவர் ஜி.அரவிந்தராஜ், டில்லி பாபு, சத்தியமூர்த்தி, தாமஸ், எட்வின்தாமஸ், தம்புராஜ், அறிவுமதி தலைமையில் போதை இல்லாத தமிழகம் என்ற தலைப்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஐந்தாயிரம் பேர் கலந்து கொண்ட மாரத்தான் நடைபெற்றது. இதனை அமைச்சர் தா.மோ அன்பரசன் கொடியாசைத்து துவக்கி வைத்தார்.

இதில் சிறியவர் பெரியவர் மாற்றுத்திறனாளி என அனைத்து தரப்பினரும் கலந்துகொண்டு குரோம்பேட்டை பேருந்து நிலையத்திலிருந்து துவங்கி சுமார் ஐந்து கிலோ மீட்டர் தூரம் சென்று மீண்டும் குரோம்பேட்டை பேருந்து நிலையத்தையே வந்தடைந்தனர்.

இதில் வெற்றி பெற்ற நபர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பத்திரிகையாளர்களிடம் பேசிய தா.மோ.அன்பரசன் தமிழக மக்களிடையே போதை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 5 ஆயிரம் பேர் கலந்துகொண்டு இந்த மாரத்தான் நடைபெற்றுள்ளது.

போதைப்பொருட்கள் இளைஞர்கள் மத்தியில் ஊடுருவி இளைஞர்கள் கெட்டுப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் போதையில் இருந்து இளைஞர்களை பாதுகாத்திட வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறார்.

இது கடந்த 10 வருடத்தில் ஆரம்பித்தது அப்பொழுது யார் ஆட்சியில் இருந்தால் என்பது அனைவருக்கும் தெரியும் தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியா முழுவதும் ஒவ்வொரு நாளும் எவ்வளவு கஞ்சா பிடிக்கிறது என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்

பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த மாரத்தான் இது நடைபெற்றுள்ளது இந்த நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் கோ.காமராஜ், 2வது மண்டல குழு தலைவர் ஜோசப் அண்ணாதுரை, 1வது மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி, பகுதி செயலாளர்கள் ஜெயக்குமார், பெர்னார்ட், மாமன்ற உறுப்பினர்கள் பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்..

# வடுகபட்டி ஸ்ரீலட்சுமி விநாயகர் திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம்; பக்தர்கள் தரிசனம்





பெரியகுளம் பிப்18

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே வடுகபட்டி ரெங்கா நகரில் ஸ்ரீ ரெங்கா ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் மூலம் புதியதாக கட்டபட்டுள்ள ஸ்ரீ லட்சுமி விநாயகர் திருக்கோவிலில் நூதன ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

இந்த திருக்கோவிலுக்கு இமயமலை, காசி, ராமேஸ்வரம், நாசரேத், சுருளி தீர்த்தம் உள்ளிட்ட 48 புண்ணிய தலங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட தீர்த்தத்தில் ஆண்டிபட்டியை சேர்ந்த கும்பாபிஷேக சர்வ சாதகரும், கிராம புரோகிதருமான ரவி அய்யர் தலைமையில் விக்னேஷ்வர பூஜை, கும்ப அலங்காரம், கல சஸ்தாபனம், புண்ணிய வாகனம், பஞ்சகவ்ய பூஜை, வாஸ்து ஹோமம், வாஸ்து பலி, சகல தேவாதி ஹோமங்கள், யாக வேள்வி துவக்கம், பந்தானம் மஹா பூர்ணாகுதி கடம், யஜமானர் ஆசீர்வாதம் உள்பட பூஜையுடன் 11 வகையான திரவியங்களில் மஹா அபிஷேகத்துடன் திவ்ய அலங்காரம் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தொழிலதிபர்கள், ஒப்பந்ததாரர்கள், வர்த்தக முக்கியஸ்தர்கள், ரியல் எஸ்டேட் நிறுவனத்தினர்கள், பக்தர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பக்தர்களுக்கு அறுசுவையுடன் மாபெரும் சிறப்பு அன்னதானம் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியை ஸ்ரீ ரெங்கா ரியல் எஸ்டேட் பங்குதாரர்கள் சின்னன், நல்ல மாயன் மற்றும் சிவக்குமார் ஏற்பாடு செய்திருந்தனர். மேலும் பங்குதாரர்கள் கூறுகையில் ஸ்ரீ ரெங்கா நகர் வீட்டு மனையில் நல்ல குடிநீர், பிரதான சாலை, கழிவு நீர் வாய்க்கால்,சோலார் தெரு விளக்குள், வீடு கட்டுவதற்கு வங்கி மூலம் கடன் பெற்று தருதல் போன்ற வசதிகளை ஏற்படுத்தி தருகிறோம் என்று பேசினர்.



மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் அம்ரூத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் திட்டப் பணிகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது அருகில் மேயர் இந்திராணி பொன்வசந்த் , ஆணையாளர் சித்ரா விஜயன், தலைமை பொறியாளர் ரூபன் சுரேஷ் மற்றும் மாநகராட்சி பொறியாளர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## சென்னை வடக்கு பட்டு மேடவாக்கம் தொழில்முனைவோர் குறித்து பொதுமக்கள் தயாரித்த பொருட்களின் விற்பனை மற்றும் கண்காட்சி

மேடவாக்கம் பிப் 18

சென்னை அடுத்த வடக்குபட்டு மேடவாக்கம் குடியிருப்போர் நல சங்கம் கூட்டமைப்பு சார்பில் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் பொதுமக்கள் மைதானத்தில் தொழில்முனைவராக்கும் வகையில், வீட்டில் தயாரித்த மற்றும் பொருட்களை கண்காட்சி படுத்தி விற்பனை செய்யும் மேடவாக்கம் மைதானத்தில் நடைப்பெற்றது வீ டே யின் இரண்டாம் ஆண்டு விழா தலைவர் சுபஶ்ரீ நடராஜன், தலைமையில் செயலாளர் ஜெய் கணேஷ், பொருளாளர் ஸ்வேதா, ஆகியோர் முன்னிலையில் கண்காட்சி 100க்கும் மேற்பட்ட அரங்குகளை பொதுமக்கள் அமைத்திருந்தனர்.



இதில் பிரதனமாக உணவு பொருட்கள் கண்காட்சி அமைந்திருந்தது பொது மக்களே துணி மற்றும் உணவு பொருட்கள் பல்வேறு பொருட்களை அவர்களே நேரடியாக விற்பனை செய்தனர். அதேபோல் உணவு பொருட்கள் மட்டுமின்றி அழகுசாதன பொருட்கள், கைவினை பொருட்கள், மேக்கப் பொருட்கள், என கிராமத்து திருவிழாவை நேரில் காண்பது போல் கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த கண்காட்சியில் பொதுமக்கள் குழந்தைகள் மேடவாக்கம் குடியிருப்போர் நல சங்கம் கூட்டமைப்பு என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்வையிட்டு பொது மக்கள் தயாரிப்புகளை வாங்கி பொதுமக்களுக்கு ஊக்கமளித்தனர்.

இந்த கண்காட்சி மூலம் கிடைக்கும் நிதியை மேடவாக்கத்தில் இருக்கும் வரப்புயர புதுப்பித்தல் பெரிய ஏரியை பராமரிப்பு தேவையான உதவிகள் செய்யப்படும் எனவும் மேடவாக்கம் குடியிருப்போர் நல சங்கம் கூட்டமைப்பு நிர்வாகத்தினர் தெரிவித்தனர்

இறுதியில் குடியிருப்போர் நல சங்கம் சார்பில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது அனைவருக்கும் ஊக்குவிக்கும் வகையில் சுபஶ்ரீ நடராஜன் உலக சாதனை படைத்த குராசட் சால்வை அவர்களுக்கு வழங்கினார்கள்..

## மானாமதுரையில் தேரோட்ட பாதையில் உள்ள மழைநீர்க்கால்வாய் உறுதித்தன்மையுடன் அமைக்க சமூக ஆர்வலர் கோரிக்கை



மானாமதுரை பிப்.18

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை நகராட்சியில் உள்ள பிரசித்தி பெற்ற ஆனந்தவல்லிசோமநாதர் கோவில் தேரோட்டம் வருடம் தோறும் சித்திரை மாதம் நடைபெறும் மதுரை முக்கு அருகில் ரதவீதிகள் அமைக்கப்பட்டு வரும் மழைநீர்க்கால்வாய்களை தேரின் சுமை தாங்கும் வகையில் உறுதித்தன்மையுடன் அமைக்க வேண்டுமென பக்தர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மானாமதுரை நகராட்சியில் 27 வார்டுகளில் 60 ஆயிரம் பேர் வசித்து வருகின்றனர். இந்நிலையில், நகராட்சிப்பகுதிகளில் பல்வேறு அடிப்படை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் இங்குள்ள அருள்மிகு ஆனந்தவல்லி ஶ்ரீசோமநாதர் கோவில் தேரோட்டம் விமரிசையாக நடைபெற்று வருகிறது.

இக்கோவிலுத்தா தற்போது 100 டன் எடையில் புதிய தேர் தயாரிக்கப் பட்டுள்ளது. தேரோட்டம் நான்கு ரத வீதி வழியாக செல்லும் போது கோவிலிருந்து புறப்பட்டு உச்சமாகாளி அம்மன் கோவில் வழியாக செல்லும். இந்நிலையில், உச்சமாகாளி அம்மன் கோவில் முன்பு மழைநீர் கால்வாய் அமைக்கப்பட்டு வருகிறது. தேர் செல்லும் போது அதன் பாரத்தை தாங்கும் அளவுக்கு இந்தக்கால்வாய் அமைக்கப்படுகிறதா என்ற சந்தேகத்தை பொதுமக்கள் எழுப்பியுள்ளனர். இப்பணியை எடுத்த ஒப்பந்தகாரர் தேரோட்டம் தடங்கலின்றி செல்லும் வகையில் கால்வாயின் மேலே மூடப்படும் சிமெண்ட் கான்கிரீட் தளத்தை வலிமைமிக்கதாகவும், தேரின் பாரம் தாங்கும் வகையில் அமைக்க வேண்டுமென மானாமதுரை வட்டாட்சியரிடமும், நகராட்சி நிர்வாகத்திடமும் சமூக ஆர்வலர் கீழமேல்குடி முருகன் என்பவர் மனு அளித்தார். எனவே, தேரோட்டம் செல்லும் வழித்தடத்தை தரமான முறையில் அமைக்க வேண்டும் என்பதே அனைத்து தரப்பினரும் எதிர்பார்ப்பாக உள்ளது. என்று சமூக ஆர்வலர் கீழமேல்குடி முருகன் தெரிவித்துள்ளார்..

## கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகத்திற்கான பணியினை துவக்கி வைத்து நிலம் வழங்கிய உரிமையாளர்களுக்கு ரூ.7.44 கோடி மதிப்பீட்டிலான ஆணைகளை வழங்கிய அமைச்சர்கள்



திருப்புவனம் பிப்18

சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு முதலமைச்சரால் காணொலி காட்சி வாயிலாக கீழடியில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள திறந்தவெளி அருங்காட்சியகத்திற்கான பணியினை, திருப்புவனம் வட்டம், கீழடியில், நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் துவக்கி வைத்து, திறந்தவெளி அருங்காட்சியகத்திற்கென நிலம் வழங்கிய உரிமையாளர்களுக்கு ஆணைகளை, மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் வழங்கினர்.



இந்நிகழ்வின் போது, அமைச்சர் தெரிவிக்கையில்,

சிந்து சமவெளி நாகரிகக் காலக்கட்டத்தில் தமிழர்கள் பண்பாடு கலாச்சாரத்துடன், வாழ்ந்ததற்கான அடையாளம் இந்த ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டு, உலக வரலாற்றில் தமிழர்கள் 2,600 ஆண்டுகளுக்கு முன்பு பண்பாடு கலாச்சாரத்துடன் வாழ்ந்த பெருமை தமிழர்களுக்கு முழுமையாக இருந்ததாக போற்றப்பட்டு வருகின்றன.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புகள் உலகநாடுகள் அளவில் பேசப்படும் அளவிற்கு பண்டையக்காலத்தில் தமிழர்கள் வாழ்ந்த வரலாற்றுச் சிறப்புகள் கண்டறியப்பட்டுள்ளது. இதில், பண்டையகாலத்திலேயே வாழ்ந்த முன்னோர்கள் நாகரிக ஆபரணங்கள் பயன்படுத்தியது, எழுத்துச்சுவடிகள், தற்காப்புக்காக பயன்படுத்தும் ஆயுதங்கள், கட்டுமானப் பொருட்கள் என பலதரப்பட்ட பொருட்கள் இதுவரை நடந்த ஆராய்ச்சியின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இதன்மூலம், பண்டையக்கால மக்களின் நகரநாகரிக கலாச்சாரத்தை தெரிந்து கொள்வது மட்டுமன்றி, அதனைப் பாதுகாப்பதும் தங்கள் கடமை என உணர்ந்து, தமிழகத்தில் தொன்மை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புக்கள் கிடைக்கும் இடங்களைக் கண்டறிந்து, ஆராய்ச்சிப் பணிகளை செயல்படுத்தி முன்னோர்களின் கலாச்சாரத்தையும், பண்பையும் வரும் இளம் தலைமுறையினரும் தெரிந்து கொள்ளும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு, இதன்மூலம் கலாச்சாரங்களையும், தமிழர்களையும் எப்பொழுதும் பாதுகாக்கும் தலைவராகத் திகழக்கூடியவர் தமிழ்நாடு முதலமைச்சர் ஆவார்.

கீழடி ஆராய்ச்சி என்பது இந்த மண்ணிற்கு கிடைத்த பெரிய பாக்கியம் ஆகும். கீழடி, மணலூர், கொந்தகை, அகரம் ஆகியப்பகுதிகளில் தொல்லியியல் துறையின் மூலம் இதுவரை 9 கட்ட அகழாய்வு ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. தற்பொழுது 10ஆம் கட்ட அகழாய்வு ஆராய்ச்சிப் பணிகளும் இன்றையதினம் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சரால் கடந்த 23.01.2025 அன்று, கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைப்பதற்கென ரூ.17.80 கோடி மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டப்பட்டது மேலும் சிறப்புக்குரியதாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள கீழடி திறந்தவெளி அருங்காட்சியக பணியும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

கீழடியின் பெருமையை பறைசாற்றுகின்ற வகையில், இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களது பங்களிப்பினையும் ஏற்படுத்திடும் நோக்கில், தங்களது நிலங்களை திறந்தவெளி அருங்காட்சியகம் அமைப்பதற்காக வழங்கியுள்ளனர். அவர்களை பாராட்டிடும் வகையிலும், கௌரவிப்பதன் வகையிலும், நிலங்களை வழங்கிய 16 உரிமையாளர்களுக்கு மொத்தம் ரூ.7.44 கோடி மதிப்பீட்டில் அதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, கீழடி அருங்காட்சியகத்தினுள் பார்வையாளர்களை கவருகின்ற வகையில் அமைக்கப்பட்டுள்ள பூம்புகார் கைவினை பொருட்களின் விற்பனையும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று பண்டையகால தமிழர்களின் பெருமையை பறைசாற்றுகின்ற வகையிலும், போற்றுகின்ற வகையிலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சிறப்பாக நடவடிக்கைகள் தமிழக முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என அமைச்சர் பெருமக்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.செல்வசுரபி தொல்லியியல்துறை இணை இயக்குனர் சிவானந்தம் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார் அருங்காட்சியக இணை இயக்குநர் ரமேஷ், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், முன்னாள் கீழடி ஊராட்சி மன்றத்தலைவர் வெங்கட சுப்பிரமணியன், திருப்புவனம் வட்டாட்சியர் விஜயகுமார் மற்றும் தொல்லியல் துறையைச் சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் மாசெள. சங்கீதா, மாநில அளவிலான குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மதுரை அரசு விளையாட்டு விடுதியை சார்ந்த மாணவர்கள் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மதுரை மண்டல முதுநிலை மேலாளர் திரு.வேல்முருகன் அவர்கள், மாவட்ட விளையாட்டு நல அலுவலர் ராஜா உட்பட பலர் உள்ளனர்.

## சிவகங்கை மாவட்டம் குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்த கல்லல் பள்ளி மாணவர்கள்



கல்லல் பிப்.18

சிவகங்கை மாவட்டம் கல்லலில் கடந்த 31 ஆண்டுகளாக மத்திய அரசின் வழிகாட்டுதலின் பேரில் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டை தமிழ்நாட்டில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் தொடர்ந்து நடத்தி வந்த நிலையில், இந்த ஆண்டு குழந்தைகள் அறிவியல் மாநாட்டை மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் தானாக முன்வந்து முழு பொறுப்பேற்று நடத்தியது. இதில் இளநிலை மற்றும் உயர்நிலை ஆகிய இரண்டு பிரிவுகளில் பள்ளி மாணவ மாணவிகள் ஒரு குழுவிற்கு இரண்டு பேர் வீதம் தங்கள் ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்தனர். சிவகங்கை மருதுபாண்டியர் பள்ளி வளாகத்தில் கடந்த ஜனவரி 28 ஆம் தேதி நடைபெற்ற மாவட்ட அளவிலான மாநாட்டில் மொத்தம் சமர்ப்பிக்கப்பட்ட 96 ஆய்வுக் கட்டுரைகளில் 38 ஆய்வுக் கட்டுரைகள் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் இருந்து சமர்ப்பிக்கப்பட்டது.



இந்த ஆய்வு கட்டுரைகளுக்கு இப்பள்ளியின் ஆசிரியர்கள் அனைவரும் வழிகாட்டி ஆசிரியர்களாக செயல்பட்டது குறிப்பிடத்தக்கது. பிப்ரவரி முதல் நாள் தென்காசி அருள்மிகு செந்தில் ஆண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்ற மண்டல அளவிலான மாநாட்டில் மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 13 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டது.

அதில் கல்லல் முருகப்பா மேல்நிலைப்பள்ளியில் இருந்து ஒரு ஆய்வுக் கட்டுரை இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றது . அதாவது, சிவகங்கை மாவட்டத்திலிருந்து மாநில போட்டிக்கு தகுதி பெற்ற ஒரே ஆய்வுக் கட்டுரை இதுதான். பிப்ரவரி 15, 16 ஆம் நாட்களில் புதுக்கோட்டை திருவரங்குளத்தில் உள்ள புஷ்கரம் வேளாண் கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள் இராஜ கணபதி, சரவண பிரவீன் மற்றும் வழிகாட்டி ஆசிரியர் பிரபு ஆகியோருக்கு பணி நிறைவு இஸ்ரோ விஞ்ஞானி இங்கர்சால் மற்றும் விஞ்ஞானி ராஜ்குமார் பரிசு மற்றும் சான்றிதழை வழங்கினர். மாநில மாநாட்டில் கலந்து கொண்ட இவர்களை குழந்தைகள் அறிவியல் மாநாட்டின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சேவற்கொடியோன், மாவட்ட செயலாளர் ஆரோக்கியசாமி, பள்ளி தலைமையாசிரியர் அழகப்பன் பாராட்டினர்.

மாலை தந்தி

18.02.2025



தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் திருமலாபுரம் நாடார் மேல்நிலைப் பள்ளி எதிரில் புதியதாக துவங்கியுள்ள ஸ்ரீ போகர் ஸ்ரீ வராகி அம்மன் கார் பார்க்கிங் திறப்பு விழா நடைபெற்றது. திறப்பிழாவிற்கு போடிநாயக்கனூர் ஜமீன்தார் வடமலைராஜைய பாண்டியன் , அருள்மிகு பரமசிவன் கோவில் அறங்காவலர், போடிநாயக்கனூர் நகர் நலசங்க தலைவர் தலைமையில் ரிப்பன் வெட்டி தொடங்கிவைத்தார். அருள்மிகு ஸ்ரீ முருகன் கந்த சஷ்டி திருக்கல்யாண அன்னதான அறக்கட்டளை தலைவர் செண்பகராஜன் மற்றும் முக்கிய நிர்வாகிகளும் உறுப்பினர்களும் ஆன்மீக அன்பர்களும் கார்பார்க்கிங் திறப்பு விழாவிற்கு கலந்து கொண்டனர்.



தூத்துக்குடியில் சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை மற்றும் சான்றிதழ், நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஓய்வு பெற்ற மாநகராட்சி பணியாளர்களுக்கு சேமநலநிதி வட்டித்தொகை வழங்கும் விழா தூத்துக்குடி மாநகராட்சி மாநாட்டு மையத்தில் நடைபெற்றது. விழாவில் கனிமொழி எம்.பி., சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி மாநகராட்சி ஆணையர் மதுபாலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கடலூர் மாவட்டம் வடலூரில் ஜோதிஞான மருந்து அறக்கட்டளையின் சார்பில் மருத்துவர் தயவுத்திரு ஜகத்குரு தலைமையில் சிறப்பு முகாம் நடைபெற்றது இதில் மக்களுக்கு பசுமை புரட்சி விழிப்புணர்வு ஏற்படுத்தியும் ஞான மூலிகை புத்தகம் வழங்கியதோடு பஞ்சகவியம் தயாரிப்பது குறித்த விளக்கங்களும் அளிக்கப்பட்டது இதில் ஜோதி ஞான மருந்து அறக்கட்டளை தன்னார்வலர்கள் பலரும் உடன் இருந்தனர்..

## கிழக்கு தாம்பரம் விசிரிமல் புக் ராஜ் போரா அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 43 ஆம் ஆண்டு விழா

தாம்பரம் பிப் 18



தாம்பரம் அடுத்த சேலையூரில் கிழக்கு தாம்பரம் விசிரிமல் புக் ராஜ் போரா அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 43ஆம் ஆண்டு விழா தலைமை ஆசிரியர் ஈஸ்வரி தலைமையில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக 5வது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன், எழுத்தாளர் மற்றும் பேச்சாளர் சரிதா ஜோ, செங்கல்பட்டு உடற்கல்வி ஆய்வாளர் திருவாளர் செல்வன் ஆகியோர் கலந்து கொண்டு பள்ளியில் படிக்கும் மாணவிகளுக்கு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் ஊக்குவிக்கும் வகையில் நல்ல அறிவுரைகளை வழங்கினார்கள் அதனை தொடர்ந்து பள்ளியில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ்கள் பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் 46வது மாமன்ற உறுப்பினர் ரமணி ஆதிமூலம், 48வது மாமன்ற உறுப்பினர் சசிகலா கார்த்தி, லைன் கிளப் சுரேஷ்குமார், எஸ்.எம்.சி.தலைவர் நல்லது லிங்கம், பி.டி.ஏ தலைவர் உஷா ரமேஷ் மற்றும் ஆசிரியர்கள் அலுவலக பணியாளர்கள் மாணவிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்



மதுரை மாவட்ட ஆட்சியரின் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாளில் பொதுமக்களிடம் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா பெற்றுக்கொண்டார்.

## கொடைக்கானல் மேல்மலை கிராமத்தில் துணை காவல் நிலையம் திறப்பு



கொடைக்கானல் பிப்18



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மேல் மலை பகுதிகளான பூம்பாறை, மன்னவன்னூர் கிளாவரை, கூக்கால், குண்டுபட்டி, கவுஞ்சி போன்றபதினைந்து கிராமங்கள் உள்ளன இந்நிலையில் பல வருடங்களாக அப்பகுதியில் காவல் நிலையம் அமைத்து தர வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்து வந்துள்ளனர்

மேல்மலை கிராமங்களில் சுற்று வட்டார கிராமங்களில் எந்த ஒரு குற்ற செயலில் நடைபெற்றாலும் பிரச்சனை களுக்கு 25 கிலோமீட்டர் முதல் 50 கிலோ மீட்டர் தொலைவு வரைக்கும் வந்து கொடைக்கானல் காவல் நிலையத்தில் புகார் அளிக்க வேண்டிய சூழ்நிலை உள்ள நிலையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் அவர்கள் மற்றும் கொடைக்கானல் காவல் கண்காணிப்பாளர் மதுமதி காவல் ஆய்வாளர் பாஸ்கரன் தலைமையில் சோதனைச் சாவடி மற்றும் துணை காவல் நிலையத்தை திறந்துவைத்தனர்

இதனைத் தொடர்ந்து வாரத்திற்கு ஒரு முறை மனுக்கள் பெறப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

மேலும் இந்த துணை காவல் நிலையம் கூடிய விரைவில் முழு காவல் நிலையமாக அமைக்க உள்ளதாகவும் காவல் கண்காணிப்பாளர் பிரதீப் அவர்கள் தெரிவித்தார்

மேலும் இப்பகுதியில் தற்போது திறக்கப்பட்ட துணை காவல் நிலையம் அப்பகுதியில் நடைபெறும் குற்ற செயல்கள் கட்டுக்குள் வரும் என்று கூறப்படுகிறது. மேலும் சுற்றுலாப் பயணிகள் மதுபோதையில் வாகனங்களை சோதனை செய்யவும் போதை காளான் ,கஞ்சா போதைப் பொருட்கள் கடத்தும் கும்பலை சுலபமாக கண்காணிக்கும் வகையில் இந்த சோதனை சாவடி அமைக்கப்பட்டுள்ளது என பொதுமக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது..

## நன்மங்கலம் ஏரி பாதுகாப்பு குழு சார்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு

நன்மங்கலம் பிப் 18




செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் பாதுகாக்க வேண்டும் என்று குறிப்பாக தாம்பரம் மாநகராட்சி உள்ள நன்மங்கலம் ஏரியை சுத்தம் செய்து குப்பைகளை அகற்றி பாதுகாக்க வேண்டும் என்று நன்மங்கலம் ஏரி பாதுகாப்பு குழுவினர் ஜலரக்ஷனா, சிட்லப்பாக்கம் ரைசிங் குழு, எக்ஸ்னோரா, இஃபா, கல்லூரி மாணவர்கள் எஸ்.ஐ.வி.டி, எம் சி சி ஜெயின், பிரின்ஸ் காலேஜ் சார்பில் இன்று செம்பாக்கம் சீயோன் பள்ளி வளாகத்தில் இருந்து காலை 7 மணிக்கு தன்னார்வலர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், நல சங்கங்கள், நன்மங்கலம் ஏரி பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு ஊர்வலமாக நன்மங்கலம் ஏரி மற்றும் அதனை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதி வழியாக ஏரிகளை பாதுகாப்போம் ஏரிகளில் குப்பைகளை கொட்டுவதை தடுத்து நிறுத்துவோம், போன்ற வாசகம் அடங்கிய அட்டைகள் ஏந்தி கொண்டு கோஷங்கள் எழுப்பியவாறு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் மூத்த சமூக ஆர்வலர் சந்தானம் அவர்கள் கலந்துகொண்டு ஏரிகளை எப்படி பாதுகாப்பது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் விழிப்புணர்வு ஊர்வலத்தில் ஏரியில் சுற்றியுள்ள அனைத்து தன்னார்வலர்கள், அசோசியேஷன் நகர் மற்றும் குடியிருப்பு வாசிகள் என்ஜிஓ மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## திசையன்விளை அருகே பைக்குகள் நேருக்கு நேர் மோதிய விபத்தில், கல்லூரி முதல்வர் மாணவர் உயிரிழப்பு

தூத்துக்குடி பிப்18



தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தைச் சேர்ந்தவர் லிவிங்ஸ்டன் (46). அங்குள்ள கல்வியியல் கல்லூரியில் முதல்வராக பணியாற்றி வந்தார். நேற்று மாலை மன்னார்புரம் விலக்கு வழியாக திசையன்விளைக்கு சென்று கொண்டிருந்தார். எதிரே திசையன்விளையைச் சேர்ந்த கல்லூரி மாணவர் ஜெய்சன் (20), மற்றும் கரன் (23) ஆகியோர் மற்றொரு பைக்கில் வந்து கொண்டிருந்தனர்.

வாழைத்தோட்டம் அருகே இரு பைக்குகளும் நேர் எதிரே மோதி விபத்துக்குள்ளானது. இதில் கல்லூரி முதல்வர் லிவிங்ஸ்டன் மற்றும் மாணவர் ஜெய்சன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த கரன் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது குறித்து திசையன்விளை காவல்துறையினர் வழக்கு பதிவுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பல்லாவரத்தில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அதிமுக சார்பில் செயல்வீரர்கள், வீராங்கனைகள் ஆலோசனை கூட்டம்

பல்லாவரம் பிப்18



சென்னை அடுத்த பல்லாவரம் தனியார் மண்டபத்தில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக அதிமுக சார்பில் செயல்வீரர்கள் வீராங்கனைகள் ஆலோசனை கூட்டம் மேற்கு மாவட்ட செயலாளர் சிட்லப்பாக்கம் இராசேந்திரன் தலைமையில் மாவட்ட கழக துனைசெயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தன்சிங் முன்னிலையில் பல்லாவரம் பகுதி செயலாளர் ஜெயபிரகாஷ் மற்றும் மாவட்ட மாணவரணி இணைச்செயலாளர் சந்திரசேகர ராஜா ஏற்பாட்டில் நடைபெற்றது. ஆலோசனை கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் ப.வளர்மதி கலந்து கொண்டு அதிமுக ஒரு பெரிய இயக்கம் இதை யாருவது தொட்டு பார்பவர்கள் கெட்டார்கள் எனவும் வருகின்ற 2026 ல் அதிமுக ஆட்சி வெற்றிபெற்று எடப்பாடியார் தமிழக முதலமைச்சராக இருப்பார் என்றும் இதற்கு மக்களை நேரடியாக சென்று அதிமுக ஆட்சியில் செய்த நலதிட்டங்கள் குறித்து எடுத்து கூறவேண்டும் என தெரிவித்தார்.

ஆலோசனை கூட்டத்திற்கு முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் என்.சி.கிருஷ்ணன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.என் இராமசந்திரன், முன்னாள் அமைச்சர் டி.கே.எம். சின்னையா, ஒன்றிய செயலாளர் கஜா என்கின்ற கஜேந்திரன், சேலையூர் சங்கர், கஜேந்திரன், அப்புவெங்கடேசன், பகுதி செயலாளர்கள் செழியன், கோபிநாத் சிட்லபாக்கம் மோகன், மதுரபாக்கம் எம்பி மனோகரன், தகவல் தொழில் அணி மாவட்ட செயலாளர் காசி ராஜன், மாமன்ற உறுப்பினர் ஸ்டார் பிரபா, சாந்தகுமார், மகளிர் அணி மாவட்ட இணைச் செயலாளர் அமுதா, முடிச்சூர் ஸ்ரீ பாஸ்கர், மூர்த்தி, திருமலை, கண்ணன், சர்குணம், ரமேஷ், கலைச்செல்வன், பாலாஜி, ஹரி கிருஷ்ணன், கற்பகம் சீனிவாசன், நித்தியா, மண்ணிவாக்கம் சாந்தி புருஷோத்தமன், துளசிங்கம், வார்டு உறுப்பினர் நாகராஜ் உட்பட மாமன்ற உறுப்பினர்கள், தொண்டர்கள் மற்றும் மகளிரணியினர் ஏராளமனோர் கலந்து கொண்டனர்..

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161